**THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT**

**CHENGALPATTU**

**SC No. 102/2024** **Dt** 29.05.2025

**PW.1 பெயர். திரு.சரண்சிங்**

## 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

சம்பவம் குறித்து நான் புகார்மனுவாக எழுதிகொடுக்கவில்லை, வாக்குமூலமாக தான் கொடுத்தேன் என்றால் சரிதான். எனது புகாரை, நான் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வந்ததால், காவல் ஆய்வாளர் வாக்குமூலம் பதிவு செய்தார். சம்பவம் நடந்ததாக சொல்லும் மாலை 6.40 மணிக்கு கும் இருட்டாக காணப்படும் என்றால் இல்லை. வீட்டின் பின்புறம் இருந்த வைக்கோலில் மாடு மேய்ந்ததாக சொல்கிறேனா என்றால் சரிதான். அந்த கும் இருட்டில், மாடு மேய்ந்ததா, இல்லையா என்பதை என்னால் கண்டு பிடிக்க முடியாது என்றால் இருட்டே இல்லை. அங்கு ஆஜர் எதிரியின் மாடு தான் மேய்ந்தது. நான் எனது வீட்டின் முன்புறமாக நானும் என் நண்பர் அன்பழகனும் பேசிக்கொண்டிருந்ததாக தான் சொல்கிறேனா என்றால் சரிதான். அவ்வாறு முன்புறம் பேசிக்கொண்டிருந்தபோது வீட்டின் பின்புறம் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரிதான். அதேபோல், 2வது எதிரி வசீகரன் ஒரு மாற்றுதிறனாளி என்றால் சரிதான். ஆனாலும் அவரால் நன்றாக நடந்து வரும் திறன் கொண்டவர். நான் நீதிமன்றத்தில் என் முதல் விசாரணையில், "2வது எதிரி வசீகரன் என்னை வெளியில் இழுத்துக்கொண்டு வந்து கழுத்தில் துண்டு போட்டு இழுத்து வந்து ஒங்கி என்தலையில் அடித்தார்" என்று சொல்லியுள்ள சங்கதியை நான் போலிசார் என்னை விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசாரிடம் சொல்லியுள்ளேன். போலிசாரிடம் சொல்லாத சங்கதிகளை இந்த நீதிமன்றத்தில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வீட்டுமனை சம்மந்தமாக, எனக்கும் எதிரிகளுக்கும் இடையே ஏதேனும் வாய்மொழி பஞ்சாயத்து ஏற்ப்பட்டதா என்றால் பஞ்சாயத்து செய்யவில்லை. இது சம்மந்தமாக இருத்தரப்பினர்களுக்கும் இடையே வாய் தகராறு தான் ஏற்ப்பட்டது. இது சம்மந்தமாக எதிரிகள் மீது காவல் நிலையத்தில் இதற்கு முன்பு வந்த பிரச்சனைக் குறித்து எதிரிகளுக்கு எதிராக ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் புகார் கொடுத்துள்ளேன். இது உரிமையியல் வழக்கு என்பதால் சிவில் நீதிமன்றத்தில்

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-5.pdf

வழக்கு தாக்கல் செய்ய ஆலோசனை வழங்கிவிட்டனர். ஒரு முறை அது குறித்து பஞ்சாயத்து நடந்தது என்று சாட்சி பின்னிட்டு சாட்சியமளிக்கிறார். அவர்கள் கூறியபடிக்கு சிவில் நீதிமன்றத்தில் அது குறித்து வழக்குத் தொடர்ந்தேனா என்றால் இல்லை. வட்டாட்சியர் அலுவலகத்தில் பட்டா சம்மந்தமாக மனு அளித்தேன். நான் ஒரு வழக்கறிஞர் என்பதை போலிசார் என்னை விசாரித்தபோதோ அல்லது நீதிமன்றத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நானும் எனது நண்பர் வழக்கறிஞர் அன்பழகனும் நீதிமன்ற பணிகளை முடித்துவிட்டு எனது அலுவலக பணியையும் முடித்துவிட்டு நான் வீட்டுக்கு வர எப்போதும் இரவு 9 மணி ஆகவிடும் என்றால் சரியல்ல. வீட்டிற்கு பின்புறம் அமைந்துள்ள வைக்கோல்போர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் பொதுவான இடம் என்றால் சரியல்ல. எங்களது இடம் தான். பொதுவான இடம் கிடையாது. என் தகப்பனார் தான் வீட்டிற்கு பின்புறம் வைக்கோலை மாடுமேய்ந்ததை ஓட்டிவிட்டதாக நான் போலிசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் சரிதான். உண்மையில் நான் நேரடியாக சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் வழக்கிற்காக தவறாக அவ்வாறு என் தகப்பனார் தான் மாட்டை ஓட்டிவிட்டார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல. 2வது எதிரி வசீகரன் ஒரு மாற்றுதிறனாளி என்பதால் அவரால் ஒரு கனமான பொருளையோ, வேறு எந்த பொருளையோ துாக்கவே முடியாது என்று அவர் சொல்வது சரியல்ல. எனக்கு அடிப்பட்டு மருத்துவமனைக்கு எந்த வானத்தில் சென்றோம் என்றால் என் நண்பர் கோபி காரில் தான் சென்றோம். என்னுடன் காரில் அப்போது யார் யார் வந்தனர் என்றால் நானும், அன்பழகன்,கோபி, என் அண்ணன் செல்வதுரை ஆகியோர் வந்தனர். என் அப்பா மருத்துவமனைக்கு என்னுடன் வந்தாரா என்றால் இல்லை. எந்த மருத்துவமனைக்குச் சென்றோம் என்றால் செங்கல்பட்டு அரசுமருத்துவமனைக்குச் சென்றோம். எனது போலிசார் வாக்குமூலத்தில் எத்தனை மணிக்குச் செங்கல்பட்டு மருத்துவமனைக்குச் சென்றோம் என்று சொன்னேனா என்றால் சொல்லவில்லை. எத்தனை மணிக்கு டிஸ்சார்ஜ் ஆகி மருத்துவமனையிலிருந்து வெளியே வந்தேன் என்பதைக் குறித்து வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியுள்ளேன். சம்பவம் நடந்தபோது, சம்பவத்தைப் பார்த்த அக்கம்பக்கத்தினர் யார் யார் என்பதைக்குறித்து நான் போலிசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனக்கு ஏற்ப்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரிதான். உண்மையில் அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் எனக்கும் எதிரிகளுக்கும் இடையிலான நில பிரச்சனையை திசைதிருப்பும் நோக்கத்திலேயே இவ்வாறு எதிரிகளுக்கு எதிராக புகார் கொடுத்து எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியில்ல. பன்னீர்செல்வம்,

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-5.pdf

www.ecourtsindia.com

செல்வதுரை ஆகியோர் என் சொந்தகாரர்கள் என்றால் சரிதான். என் அப்பா தான் மாட்டை விரட்டினார், நான் மாட்டை விரட்டவில்லையா என்றால் ஆமாம். அப்பா எதுவும் மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்றாரா என்றால் எதிரி வசிகரன் என் அப்பாவை கன்னத்தில் அடித்தார் என் அப்பாவுக்கு காயம் இல்லை. அதனால் என் அப்பா மருத்துவமனையில் சிகிச்சைப் பெறவில்லை. நான் ஒரு செங்கல்பட்டு மாவட்டம் திருக்கழுக்குன்றம் வழக்கறிஞர் என்பதால் எனது செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சி படித்துப் பார்த்து சரி என்று ஒப்புக்கொண்டு 29.05.2025 _அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்,

Witness Sd/-XXXX

Sd/-Tmt.T.JayashreeM.L.,

தலைமை குற்றவியல் நடுவர்,
**செங்கல்பட்டு.**

This is a True Copy of the Court Records Online. Proofed @ eCourtsIndia.com/TrueCopy/TNCG060025382024-orderno-5.pdf